# உயிர் முறைமைகள் தொழினுட்பம்
# BIO SYSTEMS TECHNOLOGY

## அலகு - 16
## சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழில

16.10 - சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வகைமை
16.20 - சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள்

The National e-learning Portal for General Education

ஆக்கம் : திரு. பி.எவ்.ரதீந்திரகுமார், மட் / இந்துக் கல்லூரி

# 16.0 சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழில்

## 16.1 சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வகைமை

### மரபு ரீதியான சுற்றாடல் கைத்தொழில் - Traditional Tourism

- இலங்கை வரும் பெரும்பாலான உல்லாச பயணிகள் கரையோரப் பிரதேசங்களையே பெரிதும் விரும்புகின்றனர்.
- இலங்கையின் உட்பகுதியான யால, உடவளவை, சிங்கராஜா போன்ற பிரபலமான இடங்களுக்கு வருவது குறைவாகும்.
- இதைவிட உல்லாசப் பயணிகள் பார்வையிடாத, சுற்றுலாத்துறை வலயமாக விருத்தி செய்யக்கூடிய ஏராளமான இடங்கள் காணப்படுகின்றன.
- இவ்வாறான இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் கவனயீர்ப்பை மேம்படுத்தல், உற்பத்தியைப் பல்வகைமைப்படுத்தல், உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக புதிய அம்சங்களை உருவாக்கல், மற்றும் நாட்டின் கலாசாரம், இயற்கை வனப்பு, பல்வகைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்தல் வேண்டும்.
- மரபு ரீதியான உல்லாசப் பயணக் கைத்தொழிலைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான உல்லாசப் பிரயாணிகள் சந்தோசமாக இருப்பதற்கே வருகின்றனர்.

### மரபு ரீதியான சுற்றாடல் கைத்தொழிலில் ஏற்படும் பிரச்சினைகள்

- சுற்றாடல் மாசடைதல், அவற்றின் தரம் குன்றுதல்.
- சூழலில் இருந்து கிடைக்கும் அனுகூலங்கள் குறையும்.
- அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் பண்பாடுகள் சீர்குலையும்.
- போதைப் பொருட்களக்கு அடிமையாதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம்.

மேற்படி இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்காக சுற்றாடல் சார்ந்த உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலில் கவனம் செலுத்த வேண்டும்.

### சுற்றாடல் சார்ந்த சுற்றாடல் கைத்தொழில் - Eco Tourism

- இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வதுடன் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இயற்கை வளங்களுக்கு மதிப்பளித்து மேற்கொள்ளப்படும் போக்குகளே சுற்றாடல் சார்ந்த உல்லாசப் பயணத்துறை எனப்படும். அதாவது, சுற்றாடலை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் உல்லாசப் பயணக் கைத்தொழில் ஆகும்.
- சுற்றாடல் சார்ந்த உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின்போது, பூர்த்தி செய்யப்பட வேண்டிய எழு விடயங்கள் உள்ளன.
  1. இயற்கைச் சூழலொன்று பயண முடிவாக இருத்தல்.
  2. சுற்றாடல் பாதிப்பு மிகக் குறைவாக இருத்தல்.
  3. சுற்றாடல் சார்ந்த அறிவைக் கட்டியெழுப்பல்.
  4. நேரடியான நிதி அனுகூலங்களை சுற்றாடற் காப்புக்காகப் பயன்படுத்தல்.
  5. பிரதேச மக்களின் நன்மைக்கான நிதிசார்ந்த அனுகூலங்களைப் பயன்படுத்தல்.
  6. சுதேச பண்பாட்டை மதித்தல்.
  7. மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் உறுதிப்படுத்தல்.

### சுற்றாடல் சார்ந்த சுற்றாடல் கைத்தொழிலின் அனுகூலங்கள்

**பொருளாதார அனுகூலங்கள்**

- சுற்றாடல் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில் நடைபெறும் பிரதேசத்தின் மக்களுக்குப் பல்வேறு வருமான வழிகள் கிடைத்தல்.
- அரச நிறுவனங்களுக்குப் பொருளாதார அனுகூலம் கிடைத்தல். உ - ம்: அனுமதிச்சீட்டு விற்பனை.
- பிரதேச உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்
- சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டல்

**சமூக, கலாசார அனுகூலங்கள்**

- உள்ளூர் மக்களின் கலாசாரம் பற்றிய பிரசாரம் கிடைத்தல் / அறிவூட்டம் கிடைத்தல். அறிவை ஏனையோரும் பெறத்தக்கதாக இருத்தல்.
- சூழற்றொகுதிகளின் பராமரிப்புக்கும் காப்புக்கும் கலாசாரப் பண்புகள் துணையாதல்.
- சூழலைக் கண்டுகளிப்பதால் சூழல் நேய உணர்வு உருவாதல்.
- இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் மனப்பாங்கு ஏற்படல்.
- வெவ்வேறு நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளத் துணையாதல்.
- பல்வேறு மொழிகளைக் கற்க வாய்ப்புக் கிடைத்தல்
- பிரதேசரீதியாக வருமானம் கிடைப்பதால் வறுமை நீங்குதல்
- சமூக ஏற்றத்தாழ்வுகள் குறைவடைதல்

**சூழல் அனுகூலங்கள்**

- அழகியல் பெறுமதி கிடைத்தல்.
- மக்கள் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதிருக்க முற்படுதல்.
- மாற்று வருமான வழிகள் கிடைப்பதால் இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாமை.

## சுற்றாடல்சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வகைமை

- இயற்கையோடொட்டிய சுற்றுலாக் கைத்தொழில் (Nature based eco tourism)
  விசேட குறிக்கோள் எதுவுமின்றி வெறுமனே களிப்படைவதற்காகச் சுற்றுலாச் செல்லல்.
- வீரதீரச் செயல் சார்ந்த சுற்றாடல் சுற்றுலா (Adventure eco tourism)
  திகிலூட்டும் மயிர்க்கூச்செறியும் திறந்தவெளிச் செயற்பாடுகளினூடாகச் சூழல் பற்றிய புத்தனுபவங்களைப் பெறுதல் மற்றும் பொழுதுபோக்குதல் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில்.
  உ - ம்: வேகமாக அடித்துச் செல்லும் ஆற்றுநீரில் படகோட்டல், மலையேறுதல், நீரில் வழுக்கிச் செல்லல்.
- விவசாயம் சார்ந்த சுற்றாடல் சுற்றுலாக் கைத்தொழில் (Agro eco tourism)
  பயிர்ச்செய்கை, மூலிகைத் தோட்டங்கள், விலங்குப் பண்ணைகளைப் பார்வையிடல் போன்றவற்றை உள்ளடக்கிய சுற்றாடற் சுற்றுலாக் கைத்தொழில்.
  உ - ம்: பண்ணைகள், தேயிலைப் பெருந்தோட்டங்கள், கபானா, பறவைகளை அவதானித்தல்.
- ஆன்மிகச் சுற்றாடற் சுற்றுலாக் கைத்தொழில் (Spiritual eco tourism)
  ஆன்மிக உள, உடல் சுகத்தைப் பெறும் நோக்கிலான சுற்றுலாச் செயல்களின் ஈடுபடுதல்.
- கலாசாரச் சுற்றாடற் சுற்றுலாக் கைத்தொழில் (Cultural eco tourism)
  கிராமிய சமூகம் மற்றும் அவர்களது பண்பாட்டுடன் இணைந்த சுற்றுலாக் கைத்தொழில். (கிராமிய மக்களின் பாரம்பரிய அறிவு, மருத்துவ முறைகள், தனிச்சிறப்பான உணவுகள்)

## சுற்றாடல்சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வகைமை

- இயற்கை வளங்களை பேண்தரு நிலையில் முகாமை செய்தல் வேண்டும். இதற்கு கிராம மக்களின் மதிநுட்பமான செயற்பாடும் அரச, தனியார் துறைகளில் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
- மக்கள் பெரும்பாலும் அச்சூழற்றொகுதிகள் மூலம் பல்வேறு பயன்களையும் பெறுவர். இதனால் இயற்கைச் சூழற்றொகுதிக்கு பங்கம் ஏற்பட இடமுண்டு. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். (அனுமதியின்றி மரம் வெட்டுதல், மாடுகளை மேயவிடல், அனுமதியின்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல்)
- சுற்றாடல் வளங்களை நன்கு முகாமைத்துவம் செய்தல்.
- இயற்கைச் சூழற்தொகுதியின் சுற்றுப்புற மக்களுக்கு பொருளாதார அனுகூலங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைப்பதால் சூழலைப் பாதுகாக்க முன்வரல்.
- உள்ளூர்க் கலாசாரம், வரலாறு, மற்றும் இயற்கைப் பொக்கிசங்கள் பாதுகாக்கப்படல்.
- குறிப்பிட்ட பிரதேசமொன்றில் சுற்றாடல் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலை ஆரம்பிப்பதெனின் அதற்கேற்ப வீதி வசதி, நீர் மற்றும் பிற அத்தியாவசியத் தேவைகளை வழங்குதல்
- பிரதேச மக்களுக்கு விசேட வசதிகள் கிடைப்பதால் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புக் கிடைத்தல்
- வளங்களைப் பயன்படுத்துவதோடு சுற்றாடற் தொகுதிகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுவதற்கான நல்ல மனப்பாங்குகள் ஏற்படல்.

## 16.2 சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள்

### சுற்றாடல்சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில் உள்ள உயிர்ப்பல்வகைமையுள்ள கவர்ச்சியான இடங்கள்

- கரையோர வலயம்
- ஆறுகள் / அருவிகள்
- கண்டல் நிலங்கள்
- காடுகள்
- நீர்நிலைகள்
- புகலரண்கள்
- நீர்வீழ்ச்சிகள்
- மலைகள்
- கண்டல் நிலங்கள்
- பாதாளங்கள்

### சுற்றாடல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

- பண்பாட்டு முக்கோணம் சார்ந்த இடங்கள்
  - சீகிரியா
  - யாப்பகுவை
  - சமயத்தலங்கள்
  - தலதா மாளிகை
  - அனுராதபுர வழிபாட்டுத்தலங்கள்
  - பொலனறுவை வழிபாட்டுத்தலங்கள்
  - மடுமாதா தேவாலயம்
  - தேவத்தை தேவாலயம்
  - தலவிலை தேவாலயம்
  - கீரிமலைக் கோயில்
  - நல்லூர்க் கோயில்
  - திருக்கோணேஸ்வரம் கோயில்
  - பேருவலை, கெச்சிமலைப் பள்ளிவாசல்
  - காலி, கோட்டைப் பள்ளிவாசல்
  - கொழும்பு, புறக்கோட்டை சம்மான்கோட்டுப் பள்ளிவாசல்

### கிராமிய மக்களின் விசேட சூழற்தொகுதி

- தம்பானை வேட்டுவ மக்களின் வாழ்க்கைக் கோலமும் பழக்க வழக்கங்களும்
- சிங்கராச வனத்தை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைக் கோலம்

### சுற்றாடல்சார் சுற்றுலாக் கைத்தொழில் பங்களிப்புச் செய்யும் பிரிவினர்

சுற்றாடல் சுற்றுலாக் கைத்தொழிலின் போது சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு செயல்களில் பங்களிப்புச் செய்வர். அப்பிரிவினர்கள் வருமாறு.

1. **சுற்றுலாப் பயணிகள்**
   சுற்றுலாப் பயணிகளுக்குப் பல்வேறு கவர்ச்சிகரமான இடங்களுக்குச் சுற்றுலாச் செல்வதற்கு வாய்ப்புக் கிட்டும். சுதேச சுற்றுலாப் பயணிகளும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இதிலடங்குவர்.
2. **இயற்கைச் சுற்றாடற் தொகுதிகளை முகாமைசெய்யும் நிறுவனங்கள்**
   வனப்பாதுகாப்புத் திணைக்களம், வன சீவராசிகள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற நிறுவனங்களும் அவ்வாறான இடங்களை முகாமைசெய்யும் ஏனைய தனியார் நிறுவனங்களும் இதிலடங்கும்.
3. **இயற்கைச் சுற்றாடல் தொகுதிகளை அண்டி வாழும் கிராமிய சமுதாயத்தினர்**
   இயற்கைச் சுற்றாடற் தொகுதிகளை அண்டி வாழும் சமுதாயத்தினர் பெரும்பாலும் சுற்றாடற் தொகுதிகள் மூலம் பல்வேறு பயன்களைப் பெறுவர்.
4. **சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய வணிக முயற்சிகள்**
   சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பல்வேறு வணிக முயற்சிகள் உள்ளன. சுற்றாடல் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுத்தல் தொடர்பாகச் சுற்றுலா முகவர் நிறுவனங்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் அறிவூட்டுவதும், அதற்கு ஏற்ற வழிவகைகளை மேற்கொள்வதும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஏனைய வசதிகளை வழங்குவதும் இவர்களது பணியாகும்.
5. **அரசும் சுற்றுலா நடவடிக்கைகள் தொடர்பான அரச நிறுவனங்களும்**
   மேலே விபரிக்கப்பட்ட சகல பிரிவுகளதும் சீரான தொழிற்பாட்டுக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், தேவையான தரநிர்ணயங்களை நடைமுறைப்படுத்தல்,
6. **அரசுசாரா அமைப்புக்கள்**
   கிராமிய மக்களின் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு உதவவும் சுற்றுலாக் கைத்தொழில் காரணமாக ஏற்படத்தக்க பாதகமான விளைவுகளை இயன்றளவு குறைப்பதற்குமாக அரச நிறுவனங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுதல் அரசசாரா நிறுவனங்களின் பொறுப்பாகும்.

**சுற்றாடற்சார் சுற்றுலாக் கைத்தொழிலின் வெற்றிக்காக பங்களிப்புச் செய்யும் காரணிகள்**

- **உட்கட்டமைப்பு வசதிகள்**
  - உல்லாசப் பயண ஹோட்டல்களும் விடுதியகங்களும் உண்ணாட்டு / வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை ஈடுசெய்யத்தக்கவாறு காணப்படுதல்.
  - இலங்கையின் எந்தவொரு பிரதேசத்துக்கும் இலகுவாகவும் துரிதமாகவும் சென்றடையத்தக்க வகையில் அமைக்கப்பட்ட அதிவேக பெருந்தெருத் தொகுதி காணப்படுதல்.
    உ - ணம்: அதிவேக பெருந்தெருத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளமை
  - கணினி இணைய வசதி, Wi-Fi வசதி, தொலைபேசி வசதி, விருத்தியடைந்த தொலைத்தொடர்பு வசதி காணப்படுதல்
  - வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகில் எந்தப் பிரதேசத்திலிருந்தும் இந்நாட்டுக்கு வருகை தருவதற்கேற்ற விமானப் பயண வலையமைப்பு காணப்படுதல்
  - துறைசார்ந்த சேவைகளுக்காகப் பயிற்சிபெற்ற உழைப்போர் இருத்தல்


- **சுற்றுலாத்துறைச் சந்தை**
  - சுற்றுலாச் சந்தை என்பது, சுற்றுலா இடங்கள் மற்றும் அவ்விடயங்களுடன் இணைந்த சேவைகளின் சேர்மானமாகும் என்பதை மாணவர்க்கு வலியுறுத்துக.
  - விருத்தியடைந்த உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தலானது சுற்றுலாச் சந்தையின் தரமேம்பாட்டின் மீது பங்களிப்புச் செய்தல்
  - சுற்றாடற் சுற்றுலாக் கைத்தொழிலுக்குப் பொருத்தமான பெருந்தொகை இடங்கள் இலங்கையில் காணப்படுகின்றமையால் அதற்கான சந்தைவாய்ப்பும் காணப்படுதல்.

- **மனித வளங்களின் தரம்**
  - சூழல் தொகுதிகளைக் காப்பதில் சுற்றுலாப் பயணிகள் பங்களிப்புச் செய்தல்
  - சுற்றுலாப் பயணிகள் சார்பாகக் குறித்த பிரதேச மக்களின் விருந்தோம்பல்
  - சேவை வழங்குநர்கள் குறுகிய கால நோக்கங்களை விடுத்து நீண்டகாலப் பிரதிபலன்கள் மீது கவனஞ் செலுத்துதல்
  - அச்சூழலின் சுற்றாடல் சார்ந்த முக்கியத்துவம், பார்வையிடத்தக்க இடங்கள், அவற்றின் முக்கியத்துவம், நடந்துகொள்ள வேண்டிய விதம் போன்றவை தொடர்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய அறிவூட்டஞ் செய்வதற்காக வெவ்வேறு மொழிகளில் தொடர்பாடும் ஆற்றலைக் கொண்டோர் இருப்பது அவசியமாதல்.

- **சுற்றாடற்சார் சுற்றுலாக் கைத்தொழிலில் காணப்படும் பிரச்சினைகள்**
  - புதிய முயற்சியாண்மையாளர்கள் இக்கைத்தொழிலின் மூலம் அதிக வருவாயீட்ட முயற்சிப்பதால் பாரிய சுற்றாடற் பிரச்சினை உருவாகின்றது.
  - சுற்றாடல் சார்ந்த சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதல்ல (பெருந்தெருத்தொகுதி, ஹோட்டல்கள், உணவகங்கள், ஏனைய சேவைகள்)
  - குளங்கள், நீர்நிலைகள் மாசடைதல்.
  - சுற்றாடல் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில் காரணமாக திண்மக்கழிவுகப்பொருட்கள் ஒன்று சேர்தல்.
  - சுதேச இயற்கைப் பொருட்கள் விற்பனை செய்யப்படல் (தாவரம், விலங்குகளின் பகுதி, பாறைத்துண்டுகள்)
  - சுதேச மக்களின் பண்பாட்டுத் தனித்துவத்தை பேணுவதில் தடை (பல்வேறு பண்பாடுகள் ஒன்று சேர்தல், ஆடையணிகள், பாதணிகள், உணவு பானங்கள், பழக்கவழங்கள், நடத்தைகள்)
  - சமூகவிரோத போதைப்பொருட்கள் மற்றும் ஆபாச வணிக முயற்சிகள்
  - ஆக்கிரமிப்புத் தாவர விலங்குகளால் இயற்கைச் சூழற்தொகுதிகளின் உயிர்ப்பல்வகைமை மாற்றமடைதல்.

**இயற்கையாகப் பாதுகாக்கப்பட்ட ஒரு பிரதேசத்தைக் சுற்றாடல்சார் சுற்றுலாத் துறைக்காகப் பயன்படுத்தும் வேலைத்திட்டம்**

இயற்கையாகப் பாதுகாக்கப்பட்ட ஒரு பிரதேசத்தைச் சுற்றாடல் சுற்றுலாத் துறைக்காகப் பயன்படுத்துவதாயின் வன ஜீவராசிகளைப் பாதுகாத்தவாறு இலாபகரமான வகையில் இக்கைத்தொழிலை நடாத்திச் செல்லத்தக்க ஒரு மாதிரி, ரே அஷ்டன் (Ray Ashton)என்பவரால் முன்வைக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிக்கமைய பின்வருமாறு வலயங்கள் வேறாக்கப்பட்டுள்ளதோடு அந்த வலயங்களுக்குரிய செயற்பாடுகளும் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளன.



1. பாதுகாக்கப்பட்ட வலயம் (Core Area)

இவ்வலயம் வனஜீவராசிகளுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் அளவானது அங்கு வாழும் உயிரினங்களின் வாழ்க்கை முறை, உயிரினங்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கு அமையவே தீர்மானிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் முக்கியமான வலயம் இதுவாகும். வனவிலங்குகளுக்குப் பாதுகாப்பாகவும், தமது இயல்பான செயற்பாடுகளுக்கு தடையோ இடைஞ்சலோ இன்றி வாழ்வதற்குப் போதுமான அளவு இடவசதி இங்கு காணப்பட வேண்டும். பார்வையாளர்கள் நுழைவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

2 . சுற்றாடற் சுற்றுலா வலயம் (Eco tourism zone)

சுற்றுலாக் கைத்தொழில்சார்ந்த நுகர்வு அல்லாத தொழிற்பாடுகளை இவ்வலயத்தில் நடாத்திச் செல்லலாம். இவ்வலயத்தில் சிற்றுண்டிச்சாலைகள், தங்குமிட வசதிகள், விலங்குகளை அவதானிப்பதற்கான இயற்கைக் காடுகள் போன்றவற்றைத் தாபிக்கலாம். பயிற்சிபெற்ற வழிகாட்டியொருவரின் துணையுடன் மாத்திரமே இவ்வலயத்தைப் பார்வையிட அனுமதியளிக்கப்படும். வரையறுக்கப்பட்ட தொகையினர் தங்கியிருக்கத்தக்க வகையில் சூழலுக்கு நேயமான முறையில் தங்குமிட வசதிகள் அமைப்பது பொருத்தமானது. பார்வையாளரிடம் கட்டணமும் அறவிடப்படலாம். வழிகாட்டிகளுக்கும் வனத்தை நிருவகிப்போருக்கும் வேதனம் வழங்குவதற்கும், வனத்தைப் பராமரிப்பதற்கும் அப்பணத்தைப் பயன்படுத்தலாம்.

3 . தாங்கல் வலயம் (Buffer zone)

இவ்வலயத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பல்வேறு செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வசதிகளைத் தாபிக்கலாம். அப்பிரதேசத்தின் பண்பாடு பேணத்தக்க வகையிலும், பிரதேச மக்களுக்கு வருமானம் ஈட்டத்தக்க வழிவகைகளை அங்கு தாபிப்பதும் முக்கியமானது. நீச்சற் தடாகம், சிற்றளவிலான அரும்பொருளகங்கள் போன்றவற்றைத் தாபிக்கலாம். காணப்படும் வசதி மற்றும் உல்லாசப் பயணிகளின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் சூழலுக்குத் தீங்கு ஏற்படாத வகையிலும் இவற்றைத் திட்டமிட்டுச் செய்தல் வேண்டும். கிராம மக்களுக்கு நலன்புரிதல் அத்தியாவசியமான ஓர் அம்சமாகும்.

4. வனஜீவராசி நடைபாதை (wildlife corridor)

ஏனைய இயற்கைக் காடுகளை இணைக்கத்தக்க வகையில் இவ்வன ஜீவராசி நடைபாதைகளைத் தாபித்தல் வேண்டும். இதன்மூலம் காடுகளுக்கிடையே வனஜீவராசிகளுக்குச் சஞ்சரிக்க சந்தர்ப்பம் கிட்டும். வளங்களின் பரப்பளவு குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பிராணிகள் ஒரே இடத்துக்கு வரையறுக்கப்பட்டுக் காணப்படுவதால் உள்ளக விருத்தியாதல் காரணமாக (inbreeding) பரம்பரையலகு வறிதாக்கம் ஏற்படும். இதனைத் தவிர்த்து வெவ்வேறு பிரதேசங்களில் காணப்படும் விலங்குகளுக்கு இடையே இயற்கையான கலப்பு விருத்தி ஏற்பட இடமளித்தல் மூலம் பரம்பரையலகுப் பல்வகைமையை அதிகரித்துக் கொள்ளலாம். எனவே, வன நடைபாதைகளை ஒதுக்கிவைத்தல் முக்கியமானதாகும். மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு அதற்கமையச் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதன் மூலம் எமது பெறுமதி மிக்க வளங்களைக் காப்பதோடு பொருளாதார விருத்திக்கும் வழிகோலலாம்.